பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 10 செவ்வாய்க்கிழமை 26.08.2025 கதிர் 289

**இது ரகசியம் அல்ல!**

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பின்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தமிழ் காங்கிரஸும் தமிழ் அரசுக் கட்சிக் காய்ச்சலால் கடுமையாகப் ☞2

## சட்டத்தின் முன் எவருக்கும் சிறைப்புச் சலுகை கிடையாது

### ரணில் கைது குறித்து நீதி அமைச்சர் கருத்து

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை அரசியல் பழிவாங்கலல்ல, சட்டத்தின் முன் அனைவரும் சமமாக நடத்தப்படுவார்கள். எவருக்கும் ☞8

## ரணிலைச் சந்தித்தார் ஹரினி என்ற செய்தி சுத்தப் பொய் என்கிறது பிரதமர் அலுவலகம்

பிரதமர் ஹரிணி, முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை மருத்துவமனையில் சந்தித்தார் எனக் கூறி. ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தி உண்மைக்கு ☞3

## ரணிலின் கைது தொடர்பில் சஜித் கட்சித் தலைவர்களுடன் சந்திப்பு

### நேற்று கொழும்பில் நடந்தது

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமைதொடர்பில்எதிர்க்கட்சிதலைவர்சஜித்பிரேமதாச நேற்று திங்கட்கிழமை கட்சி தலைவர்களை சந்தித்து ☞3

# செம்மணியில் அகழ்வுப் பணி நேற்று மீண்டும் தொடங்கியது

செம்மணி மனித புதைகுழிகளில் தற்போது தோண்டப்பட்டுவரும் சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் அகழ்வுப் பணிகள் நேற்று மீண்டும் தொடங்கின.

சிந்துப்பாத்திஇந்துமயானத்தில்தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் புதைகுழியின் முதல் கட்டத்தில் 9 நாட்கள் தோண்டும் பணி இடம்பெற்றது. இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்களுக்கு அனுமதி வழங்கியிருந்தது. அதில் ஏற்கனவே 32 நாட்களுக்கான பணிகள் நிறைவுற்றுள்ளன.

ஓகஸ்ட் 6 வரையில் இடம்பெற்ற 41 நாள் அகழ்வுப் பணிகளில் 150 மனித எலும்புக்கூடுகளும் எச்சங்களும் கண்டெடுக் கப்பட்டன. இந்த நிலையில் ஓய்வுக்காக இடைநிறுத்தப்பட்டிருந்த பணிகள் நேற்று மீண்டும் தொடங்கின.

ஏற்கனவே இருந்த இரு அகழ்வுத் தளங்களையும் மேலும் விரிவாக்கம் செய்வதற்கான ஆயத்தப் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது. நாளைய தினமும்



பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

நிலத்தை ஊடுருவும் ஸ்கான் இயந்திரம் மூலம் சிந்துப்பாத்தி மயானத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் அங்கு மேலும் பலரது சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பது அடையாளம் காணப்பட்டிருந்தது. இது குறித்த அறிக்கை நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டதை அடுத்து, அந்த இடங்களைத் தோண்டுவதற்கான மதிப்பீடுகளை மன்றுக்கு அறிக்கை யிடும்படி நீதிவான் ☞3

# அரசின் இனப்படுகொலை நோக்கத்தை நிரூபிக்கும் தெளிவான சான்று செம்மணி

### சுமந்திரன் நேற்று அறிவிப்பு



**செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் தற்போது தோண்டப்பட்டுவரும் அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானப் புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூட்டுத் தொ-கதிகளில் 96 சதவீமானவற்றில் ஆடைகள் இல்லை. அவர்களுக்கு இறப்பை ஏற்படுத்தியதற்கான காயங்களும் எலும்புகளில் இல்லை. ஆகவே மனிதப் புதைகுழிகளுக்கு உள்ளேயே ஓர் அசாதாணரமான மனிதப்** ☞2

## அரசியல் பழிவாங்கலை முன்னிறுத்தாமல் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுக

### பொது ஜன பெரமுன ஆளும்தரப்பிடம் வலியுறுத்து

அரசியல் பழிவாங்கலை மாத்திரம் முன்னிலைப்படுத்திசெயற்படாமல் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஆளும்தரப்பு நிறைவேற்றவேண்டும். ஆளும்தரப்பின்மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடைந்துள்ள நிலையில் மக்களின் கவனத்தை திசைத்திருப்புவதற்காகவே கைதுகள் இடம்பெறுகின்றன என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார். ☞2

## தமிழ் அரசுக் கட்சியும் தனியாக ஐ.நாவுக்கு கடிதம் அனுப்புகிறது

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்தினால் தற்போது இலங்கை தொடர்பில் முன்னெடுக்கப்படும் இலங் கைப் போர்க் குற்றங்கள், மனிதாபிமானத்திற்குஎதிரான குற்றங்கள், பன்னாட்டுச்மனித உரிமைச்சட்டமீறல்குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை, சாட்சியங்களைச்சேகரித்துப் பாதுகாப்பதற்காகச்செயற்படும் அலுவலம் இலங்கையில் இனப்படுகொலை நிகழ்ந்தது என்பதற்கான ஆதாரங்களையும் தேசிடிப் பெற்றுப் பாதுகாக்க வேண்டும்என்றுவலியுறுத்தி பேரவைக்கும் அதன் உறுப்புநாடுகளுக்கும் கடிதம் ஒன்றை அனுப்ப உள்ளது தமிழ் அரசுக் கட்சி.

இன்று அல்லது நாளை அந்தக் கடிதம் அனுப்பப்படும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் நேற்று அறிவித்தார். ☞3

## ரணில் மீதான குற்றச்சாட்டுக்கள் ஜேவிபியால் திட்டமிடப்பட்டவை

### அரசியல் கட்சிகள் பலவற்றின் தலைவர்கள் கூட்டறிக்கை

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு, சட்டத்தை தவறாகப் புரிந்துகொண்டு அரசியல் நோக்கங்களுக்காக கட்டமைக்கப்பட்டது, இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு அடிப்படையான தகவல் அரசுத் தலைவர் செயலகத்தின் உள்ளகக்கட்டுப்பாட்டுப்பிரிவால்ஜேவிபிஆர்வலர்களின் ☞3

## ரணில் தன் வாழ்நாள் முழுவதும் சிறையில் இருக்கவேண்டிய நபரே

### அதனால் ஆளும்தரப்புக்கு எமது ஆதரவு என மக்கள் போராட்ட அமைப்பு அறிவிப்பு

ரணில் விக்ரமசிங்க சிறையில் இருக்க வேண்டியவர். அதனால்ஆளும்தரப்பின்இந்தநடவடிக்கைக்குநாங்கள்பூரண ஆதரவை வழங்குவோம். அதேநேரம் ரணிலை சிறையில் அடைத்ததுபோல்அவரின்பொருளாதாரவேலைத்திட்டத்தையும் முவுக்கு கொண்டுவர வேண்டும் என ஆளும்தரப்பிற்கு ☞2

## பிள்ளையானுடன் கூட்டுச் சேர்ந்த என்பிபிக்கு எதிர்க் கட்சிகளை விமர்சிக்கத் தகுதியில்லை

### தயாசிறி எம்.பி. கொதிப்பு

உள்ளுராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பதற்கு பிள்ளையானின் கட்சியுடன் கூட்டணியமைத்த தேசிய மக்கள் சக்திக்கு எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவை விமர்சிப்பதற்கு தகுதியில்லை. இது ரணில் விக்கிரமசிங்க என்ற தனி நபருக்கான போராட்டம் இல்லை. மாறாக ஜனநாயகம் ஒழிக்கப்பட்டு நாடு அராஜக நிலைக்கு செல்வதை தடுப்பதற்கான போராட்டமாகும் என நாடாளுமன்ற ☞3

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று ஏற்கனவே ஒரு தடவை இந்தப் பத்தியில் வாசகர்களுக்கு விரிவாக விளங்கப்படுத்தியுள்ளேன். எந்தச் செய்தியாளர்கள் சந்திப்பு நடத்தினாலும் தமிழ் அரசுக் கட்சி தமிழ் அரசுக் கட்சி என்று மந்தி உச்சாடனம் போல கஜேந்திரகுமார் புலம்பிக்கொண்டே இருக்கின்றார் என்று சுட்டிக்காட்டியிருந்தேன்.

நேற்றைய செய்தியாளர்கள் சந்திப்பு அதற்கு மற்றொரு உதாரணமாக அமைந்தது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியே இந்தச் செய்தியாளர்கள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தது. அந்தக் கட்சியும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு ஒரு கடிதம் அனுப்பவுள்ளது. அந்தக் கடிதத்திற்கு ஆதரவாக தமிழ் மக்களின் கையெழுத்துக்களையும் சேகரித்து அனுப்பவுள்ளது.

வடக்கு கிழக்கில் உள்ள மனிதப் புதைகுழிகளை மறுவரைபடம் செய்து கண்காணிப்பதற்கான சர்வதேச அளவில் கட்டளையிடப்பட்ட ஒரு பொறிமுறை தேவை.

இத்தகைய கண்காணிப்பு பொறிமுறையை ஒருங்கிணைக்கும் பொறுப்பை, சட்டவிரோத படுகொலைகள் தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரிடம் ஒப்படைக்கவேண்டும்.

செம்மணி புதைகுழி அகழ்வாராய்ச்சிக்கு சர்வதேச நிபுணத்துவ உதவி மற்றும் மேற்பார்வை தேவைப்படும் அதேவேளை, அது தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதி விசாரணை இடம்பெறவேண்டும்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு முரண்பாட்டின் காலப்பகுதி முழுவதையும் உள்ளடக்கிய சர்வதேச குற்றவியல் விசாரணை ஒன்று வேண்டும். அதற்கான செயல்முறையைத் தொடங்கவேண்டும்.

போரின் பின்பான 15 ஆண்டுகளில் இலங்கையில் பொறுப்புக்கூறல் எதுவும் இடம்பெறவில்லை என்பதை ஏற்று ஐ.நா. பொதுச் சபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதனடிப்படையில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த ஐ.நா. பொதுச் சபை, ஐ.நா. பாதுகாப்புச் சபை என்பவற்றிற்குப் பரிந்துரைக்கவேண்டும்.

இலங்கையை சர்வதேசச் சட்டத்தின் கீழ் இனப்படுகொலைக்கு ஓர் அரசாகப் பொறுப்புக்கூறவேண்டிய வழக்கொன்றை உறுப்பு நாடொன்றின் மூலம் கோரவேண்டும்.

இலங்கை ஆளும்தரப்பு உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை ஒன்றைத் தொடங்குவதற்கான காலத்தையும் தளத்தையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ வழங்கக்கூடாது.

ஆகிய கோரிக்கைகள் அந்தக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கடிதத்தில் இருந்து நான் சாரம்சப்படுத்தித் தந்திருப்பவையே இந்தக் கோரிக்கைகள். உண்மையில் இவைதான் கோரிக்கைகளா என்பதை ஜனநாயகக் கூட்டணிதான் உறுதிப்படுத்தவேண்டும். ஏனெனில் கடிதத்தில் கன்னாபின்னாவென்று இவை ஏதேதோ குழப்பகரமான வடித்தில் எழுதப்பட்டுள்ளன.

எப்படியிருந்தாலும் இதையொத்த கோரிக்கைகளை முன்வைத்தே ஜனநாயகக் கூட்டணி கையெழுத்துப் போராட்டத்தைத் தொடக்கியுள்ளன. இந்த ஆவணத்தைத்தான் படித்துப் பார்க்கவில்லை என்று சுமந்திரன் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். ஆனாலும் தமக்குச் சொல்லப்பட்டவற்றின் அடிப்படையில் இந்தப் போராட்டத்திற்கு தமது கட்சியும் ஆதரவு தருகிறது என்று அவர் அறிவித்தார்.

அவர் செய்தியாளர்களிடம் பேசி முடிக்கும் தருணத்தில்தான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கஜேந்திரன் சந்திப்புக்கு வந்தார். வந்ததும் அவரைப் பேசச் சொன்னார்கள். தங்களுடன் செல்வம் அடைக்கலநாதனே இது தொடர்பில் கலந்துரையாடினார் என்பதால் அவர் பேசினால் சரி என்று முதலில் நழுவப் பார்த்தார் கஜேந்திரன். ஆனால், ஜனநாயகக் கூட்டணியின் சார்பில் நான் பேசி விட்டேன், தமிழ் அரசுக் கட்சி சார்பில் சுமந்திரன் பேசி விட்டார், இனி நீங்கள் மு-ன்னணி சார்பில் பேசினால் சரி என்றுகூறி அவரை இழுத்துவிட்டார் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

மைக்குகளுக்கு முன்னாள் அமர்ந்த உடனேயே கஜேந்திரன் சொன்னது. தமிழ் அரசுக் கட்சியின் பெயரைத்தான்.

ஜனநாயகக் கூட்டணியினர் ஐநாவிற்கு அனுப்பவுள்ள கடிதம் எமது தலைவர் கஜேந்திரகுமாருக்கு அனுப்பப்பட்டது. அதில் சில திருத்தங்களை நாம் முன்வைத்துள்ளோம். அதைச் செய்வதாக அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். நான் இந்த அறைக்குள்ளே வருவதற்கு முன்னதாக சந்திரகுமார் அண்ணனிடமும் செல்வம் அண்ணிடமும் கேட்டேன், தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாடு என்ன என்று சொல்லித்தான் கேட்டேன். அதற்கு, திரு சுமந்திரன் அவர்கள் இதற்குத் தாங்கள் முழுமையாக உடன்படுவதாக உறுதிமொழியளித்திருக்கிறார், அதையடுத்துத்தான் நான் உள்ளேயே வந்தேன் - என்றார்.

கஜேந்திரன் வந்து அமர்ந்த உடனேயே அவருக்கு மிக நெருக்கமாகத் தனது கதிரையை இழுத்துப் போட்டுக்கொண்டு, பாருங்கள் தமிழ் இனத்துரோகியின் (ஜாக்கள் பார்வையில்) அருகே கஜேந்திரகுமார் கூட்டணி சேர்ந்திருக்கிறார் என்ற பாணியில் ஒரு குசும்புச் செய்கையில் ஈடுபட்டிருந்தார் சுமந்திரன். (பின்னர் கதிரையை வழக்கமான இடத்திற்கு உடனேயே மாற்றிக்கொண்டார் என்பது வேறுவிடயம்) தமிழ் அரசுக் கட்சி ஓம் என்ற பிறகுதான் நான் உள்ளேயே வந்தேன் என்று கஜேந்திரன் கூறிக்கொண்டிருக்க அவரைப் பார்த்து நக்கல் சிரிப்போடு தலையை ஆட்டிக்கொண்டும் இருந்தார். நான் இல்லை என்றால் உங்களுக்கு அரசியலே இல்லை என்பதாக இருந்தது அந்த நக்கல் சிரிப்பு.

கடந்த இரண்டு வாரங்களுக்கு ஐ.நாவுக்கு தமிழர் தரப்பிலிருந்து அனுப்பப்பட வுள்ள மூன்றாவது கடிதம் இது. அடுத்து நான்காவதாகவும் ஒரு கடிதம் தமிழ் அரசுக் கட்சியிடமிருந்தும் அனுப்பப்படவுள்ளது. அதனையும் சுமந்திரன் அங்கேயே அறிவித்தார். இந்தக் கடிதங்களின் போக்குவரத்து எப்போது நிற்குமோ தெரியவில்லை. இந்த நான்கு கடிதங்களும் வெளிப்படையாகத் தெரிந்தவை. அது தவிர வெளியே தெரியாமலும் பல கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கும் என்பது சர்வ நிச்சயம்.

வெளியே தெரிந்த கடிதங்களில் முன்னணி சர்வதேச குற்றவியல் நீதிமன்ற (IC-C) விசாரணை வேண்டும் என்பதை முதன்மைப்படுத்தியுள்ளது. இரண்டாவது கடிதத்தில் இனப்படுகொலையை மதிப்பீடு செய்யும் அதிகாரத்துடன் பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை (IIIM) ஒன்றை நிறுவ வேண்டும் என்றும் ஸ்ரீலங்கா குடியரசுக்கு எதிராக நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் (ICJ) ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் பேரவையின் உறுப்பினர், பார்வையாளர் நாடுகள், வழக்குத் தொடரவேண்டும் என்றும் வலியுறுத்தப் பட்டுள்ளது. மூன்றாவது கடிதத்தில் நான் மேலே கூறிய எல்லாமும் வலியுறுத்தப்பட்டுள்ளது. நான்காவது கடிதத்தில் இனப்படுகொலைக்கான சான்றாதாரங்களையும் செம்மணி போன்ற விசாரணைகளை முன்வைத்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்தின் இலங்கை விவகாரம் தொடர்பான தகவல்களை உள்வாங்குதல் மற்றும் செயலாக்குதலுக்கான செயல்முறைகள் (OSLap) திட்டத்தில் சேர்த்துக்கொள்ளல் வலியுறுத்தப்படவுள்ளது.

மொத்தத்தில் போர் முடிந்து 15 வருடங்கள் கழித்து இலங்கை தொடர்பில் இனப்படுகொலையை முன்வைத்துத்தான் ஒரு சர்வதேச விசாரணை தேவை என்ற பொது இடத்திற்குத் தமிழ்க் கட்சிகளில் பலவும் வந்து சேர்ந்துள்ளன. அந்த வகையில் முன்னேற்றம்தான். ஆனால், வழக்கம்போலவே அதைச் செய்வதற்கு நான் சொன்ன முறைதான் மிகச் சிறந்தது என்ற அடிபாடு நடக்கும். எதுவுமே நடக்காத அல்லது இன்னும் பல பத்தாண்டுகளின் பின்னர் ஈழத் தமிழர்கள் அனைவரும் மறந்துபோயிருக்கும் ஒரு தருணத்தில் நடக்கப்போகும் ஒரு விடயத்திற்கு எனது அணுகுமுறைதான் சிறந்ததாக இருந்தது அதை மற்றக் கட்சிகள் கெடுத்துவிட்டன அதனால் எனக்கு வாக்கு போடுகங்கள் என்று வாசகர்களாகிய உங்கள் மண்டையைக் கழுவ வருவார்கள், அதற்காகத்தான் தமிழ் அரசுக் கட்சியின் வாயையே ஆ வென்று பார்த்துக் கொண்டிருக்கிறது முன்னணி. எல்லோரும் சொல்வதைக் கேட்டு வாங்கிப் பெற்று வாக்குகளைத் துப்ப நீங்களும் தயாராகிக் கொள்ளுங்கள். நன்றி. .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அரசின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதைகுழியாகத்தான் இது தென்படுகின்றது. தமிழர்கள் மீது இலங்கை அரசு இனப் படுகொலையை நிகழ்த்தியது என்பதை நிரூபிப்பதற்கான "இனப்படுகொலைக்கான விசேட நோக்கம்" இருப்பதை இந்தச் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் மிகத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது என்று அறிவித்துள்ளார் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளரும் அரசுத் தலைவர் சட்டத்தரணியுமான சுமந்திரன்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கட்சியினால் முன்னெடுக்கப்படவுள்ள கையெழுத்துப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மாணவி கிருஷாந்தி மற்றும் அவரது குடும்பத்தினர் கொலை வழக்கில் குற்றவாளிகளாகத் தீர்ப்பிடப்பட்டவர்களில் ஒருவரான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச கொழும்பு மேல் நீதிமன்றத்திலே கூறிய ஒரு விடயம்தான் தொடக்கத்திலே செம்மணி மனிதப் புதைகுழி என்ற விவகாரமாகத் தோற்றம் பெற்றது. இந்தப் புதைகுழிகளிலே 300க்கும் 400க்கும் இடைப்பட்ட எண்ணிக்கையிலானவர்கள் அங்கே இராணுவத்தினராலே கொன்று புதைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று அவர் தெரிவித்திருந்தார். அவரது கூற்றின் அடிப்படையிலே அவரையும் கிருஷாந்தி கொலை வழக்கின் மற்றைய குற்றவாளிகளையும் கொண்டுவந்து அந்த இடத்தை அடையாளம் காட்டச் சொன்னபோது அவர்கள் அன்றைய தினத்தில் அடையாளம் காட்டிய இடங்களிலே 15 எலும்புக்கூட்டுத் தொகுதிகள்தான் கண்டெடுக்கப்பட்டன.

ஆனால் 26 வருடங்களுக்குப் பின்னர் செம்மணியிலே, சோமரத்ன சொன்ன இடத்திற்குச் சற்றுத் தள்ளி, சிந்துப்பாத்தி இந்து மயானத்திலே தற்செயலாக இந்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அங்கு 150 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் ஏற்கனவே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எனவே நூற்றுக்கணக்கான உடல்கள் அங்கு புதைக்கப்பட்டுள்ளன என்று சோமரத்ன ராஜபக்ச 26 வருடங்களுக்கு முன்னர் கூறியது இப்போது உண்மையாகின்றது. ஆகவே அவர் கூறிய மற்றைய விடயங்களும் அதற்கு ஒத்ததாக உண்மையாகத்தான் இருக்கவேண்டும்.

இராணுவம் பொது மக்களைக் கொன்று புதைத்தார்கள் என்பதுதான் அவருடைய கூற்று. இங்கேயும் (சிந்துப்பாத்தி) பொதுமக்கள் கொன்று புதைக்கட்டதற்கான சான்றுகள்தான் காணப்படுகின்றன. பெண்கள், சிறுவர்கள், சிறிய குழந்தைகளின் எலும்புக் கூட்டுத் தொகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கடைசியாக நீதிமன்றத்திற்குக் கொடுக்கப்பட்ட அறிக்கையின்படி இந்த 150 எலும்புக் கூட்டுத் தொகுதிகளுக்குள்ளே, 96 சதவீதமான எலும்புக்கூடுகள் எந்தவிதமான ஆடைகளும் இன்றிப் புதைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல அணிகலன்கள் போன்ற வேறு தடயங்களும் அங்கு இல்லாமல் இருக்கின்றன. ஒரு காற்சங்கிலி கண்டுபிடிக்கப்பட்டதுபோன்ற சில விடயங்களைத் தவிர, பெரிதாக எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

அதற்கும் மேலதிகமாக, இதுவரைக்கும் மீட்கப்பட்ட எலும்புக்கூட்டுத் தொகுதிகளிலே காயங்கள், அதாவது இறப்பை ஏற்படுத்தியதற்கான காயங்கள் எதுவும் வெளிப்படையாகக் காணப்படவில்லை. ஆகவே மிகவும் அசாதாரணமான ஒரு முறையிலே, மனிதப் புதைகுழிகளுக்கு உள்ளேயே ஒரு அசாதாரணமான மனிதப் புதைகுழியாகத்தான் இது தென்படுகிறது. ஆகவே இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இனப்படுகொலைக்கான நோக்கத்தை வெளிப்படுத்துகின்ற ஒரு விடயமாகவும் இது வருகின்றது. சாதாரணமாக இனப்படுகொலை போன்ற சர்வதேசக் குற்றங்களிலே மென்ஸ்ரியா என்று கூறுகின்ற மன எண்ணத்தை நிரூபிக்கப்படவேண்டியது அவசியம். எல்லாக் குற்றங்களுக்கும் ஒரு மன எண்ணம் இருக்கவேண்டும், அது இருக்கும். ஆனால் இனப்படுகொலையை நிரூபிப்பதற்கு அதைவிட விசேடமாக இந்த நோக்கத்தை இன்னொரு கூறாக நிரூபிக்கப்படவேண்டியிருக்கிறது. அப்படியான விசேட நோக்கம் இருப்பதை இந்த செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் மிகத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது -

இதனால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி முன்வைத்துள்ள இந்தக் கையெழுத்துப் போராட்டத்திற்கு நாம் முழுமையான ஆதரவைத் தெரிவித்திருக்கின்றோம். நாமும் சேர்ந்து அதிலே ஈடுபடுவோம் - என்றார் அவர்.

## ரணில் தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துக்கொள்கிறோம் என்று மக்கள் போராட்ட அமைப்பின் தேசிய நிறைவேற்று உறுப்பினர் லஹிரு விஜேசேகர தெரிவித்தார்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க கைதாகி விலக்குமறியலில் வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக சட்டத்தை நிலைநாட்ட இந்த ஆளும்தரப்பு தீர்மானம் ஒன்றைஎடுத்துள்ளது. ஆளும்தரப்பின் இந்தத தீர்மானத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஏனெனில் ரணில் விக்ரமசிக அதிகாரத்தில் இருக்கும் போது நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாமல் செய்து செயற்பட்ட விதத்தை இந்த நாட்டு மக்கள் மறக்கமாட்டார்கள். பட்டலந்த போன்ற வதைமுகாம்களை ஏற்படுத்திக்கொண்டு ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளை வதைத்தவர் ரணில் விக்ரமசிங்க.

மத்திய வங்கியில் கொள்ளையடித்து நாட்டைப் பெரும் பொருளாதார நெருக்கடிக்குத் தள்ளியது ரணில் விக்ரமசிங்கவே. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குண்டு வெடிப்பு இடம்பெறும்வரை பார்த்துக்கொண்டிருந்தரும் அவரே. அந்த ரணில் விக்ரமசிங்கவே இன்று சிறையில் இருக்கிறார். அவர் கட்டாயமாகச் சிறைக்கு செல்ல வேண்டியவரே. ரணில் விக்ரமசிங்கவுடன் ராஜபக்சவினர், சந்திரிக்கா, மைத்திரிபாலசிறிசேன ஆகியோர் இணைந்தே இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

நாட்டு மக்கள் இந்த ஊழல் நிறைந்த அரசியல்வாதிகளை 2022 மக்கள் போராட்டத்தின்போதும் அதன் பின்னர் வந்த தேர்தல்களின்போதும் நிராகரித்திருந்தனர். இவ்வாறு மக்களால் நிராகரிக்கப்பட்ட மக்கள் விரோதியான ரணில் விக்ரமசிங்கவை பாதுகாக்க இப்போது அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர்.

மஹிந்த ராஜபக்சவினர், சந்திரிக்கா, மைத்திரிபாலவினர் என அனைவரும் ஒரு மேடைக்கு வந்து ரணிலுக்காக குரல்கொடுத்து வருகின்றனர். சஜித் பிரேமதாசவும் ரணிலைப் பாதுகாக்க செயற்பட்டு வருகிறார். இவர்கள் அனைவரும் இந்த நாட்டின் வளங்களை அழிப்பதற்கும் பொதுமக்களின் சொத்துக்களைத் திருடுவதற்கும் ஆதரவளித்த குற்றவாளிகள். அதனால் இவர்கள் அனைவரையும் ஒரே கூடையில் போட்டு புதைத்துவிடுவதற்கு இது சிறந்த சந்தர்ப்பமாகும்.

சட்டமா அதிபர் திணைக்களம். ஆளும்தரப்பு மக்களின் பக்கம் இருப்பதால், நாளை (இன்று) ரணில் விக்ரமசிங்கவுக்கு பிணை கிடைக்க முடியாது. ஏனெனில் அவரைச் சிறைப்படுத்தி இருக்கும் பொதுச் சொத்துக்கள் சட்டத்தை பயன்படுத்தியே ராஜபக்சவினரும் ரணில் விக்ரமசிங்கவினரும் எங்களையும் சிறைப்படுத்தி இருந்தார்கள். பொலிஸாரும் எங்களுக்கு எதிராகவே நீதிமன்றில் சாட்சியமளித்தார்கள்.

தற்போது ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான வழக்கில் பொலிஸார், சட்டமா அதிபர் திணைக்களம் எவ்வாறு செயற்படப்போகிறார்கள் என்பதை நாங்கள் பார்த்துக் கொண்டேயிருக்கிறோம். ரணில் விக்ரமசிங்க பல தவறுகளுக்குப் பொறுப்புக்கூறவேண்டிய ஒருவர். அதனால் அவருக்குப் பிணை வழக்குவதற்கு நாங்கள் எதிர்ப்பு எனபொலிஸார் இன்றையதினம் நீதிமன்றில் தெரிவிக்கவேண்டும். இத்துடன் நின்றுவிடாமல் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக தெரிவிக்கப்படும் அனைத்து குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும் விசாரணை மேற்கொண்டு, அவரை வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைக்கவேண்டும். அதனால் ஆளும்தரப்பு தற்போது எடுத்திருக்கும் நடவடிக்கையில் இருந்து பின்வாங்கக்கூடாது என ஆளும்தரப்பை கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் ரணில் விக்ரமசிங்கவை சிறையில் அடைப்பது மாத்திரம் போதுமானதல்ல. அவரைப் பின்பற்றிவந்த மக்கள் விரோத பொருளாதார கொள்கையுடனேயே அவரைத் தோற்கடிக்கவேண்டும். சர்வதேச நாணய நிதியம், இந்தியா, அமெரிக்க உள்ளிட்ட ஏகாதிபத்தியவாத புதிய லிபரல்வாத கொள்கை தொடர்ந்தும் இந்த நாட்டில் செயற்படுத்துவதற்கு இடமளிக்கக்கூடாது. அதனால் ரணில் விக்ரமசிங்கவை சிறைப்படுத்தியதுபோன்று அவரின் பொருளாதார வேலைத்திட்டங்களையும் நிறுத்துவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

## ரணிலின் கைது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடியுள்ளார். கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய தேசிய கட்சி உள்ளிட்ட பல கட்சிகளின் பிரநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

ஏனைய கட்சி தலைவர்களுடனான சந்திப்பிற்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கிய தரப்பினர்களுக்கிடையிலான சந்திப்பொன்றும் இடம்பெற்றது. முன்னாள் அரசுத் தலைவர்யின் நீதிமன்ற நடவடிக்கை தொடர்பிலான கட்சியின் நிலைப்பாட்டு குறித்த தெளிவை எட்டும் வகையிலயே இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஏனைய சந்திப்பில் முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரி பால சிறிசேன, ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள, பிரதி தலைவர் ருவான் விஜேவர்தன, சிரேஷ்ட உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம், தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சார்பில் முன்னாள் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, லசந்த அழகியவண்ண, பைசர் முஸ்தபா, பொதுஜன பெரமுனவின் சார்பில் டீ.வி.சானக ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

மேலும் ரவி கருணாநாயக்க, துமிந்த திஸாநாயக்க, காதர் மஸ்தான், பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மனோ கணேஷன், ஹஸ்புல்லா, பழனி திகாம்பரம், நிமல் லன்சா, நிசாம் காரியப்பர் ஆகியோருடன் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, மரிக்கார், மயந்த திஸாநாயக்க, கபீர் ஹசீம், காவிந்த ஜயவர்தன, ஹெக்டர் அப்புஹாமி, கீன்ஸ் நெல்சன் உள்ளிட்ட பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதை அடுத்து எழுந்துள்ள அரசியல் நிலைமை குறித்து கலந்துரையாட விசேடமாக இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ரணில் விக்ரமசிங்கவின் கைது தனிப்பட்டதொரு சம்பவமல்ல, மாறாக ஜனநாயக அரசியலுக்கு விடுக்கப்பட்டதொரு வலுவான சவாலாகும் என இங்கு கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இந்த சவாலை எதிர்கொள்ள சகல எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்காக எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல அரசியல் கட்சிகளுடனும் குறுகிய கால மற்றும் நீண்டகால வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு இந்தக் கலந்துரையாடல் கூட்டப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

இதன் போது கருத்து வெளியிட்ட முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன, இத்தருணத்தில் இரண்டு முக்கிய பிரச்சினைகளுக்கான பதில்களைத் தேட வேண்டும் என்று குறிப்பிட்டார். முதலாவது ரணில் விக்கிரமசிங்கவை விடுவிப்பதற்கான வேலைத்திட்டமாகும் என்றும், இரண்டாவதாக நாட்டின் ஜனநாயக ரீதியிலான அரசியலுக்கு விடுக்கப்பட்டுள்ள சவாலை வெற்றி கொள்வதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் நிமித்தம், சகல அரசியல் கட்சிகளும் தமது அரசியல் கொள்கை வேறுபாடுகளை புறந்தள்ளி ஒன்றுபட வேண்டும் என வலியுறுத்தினார். இதற்காக எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்படுவது முக்கியம் என்று இந்த கலந்துரையாடலில் பங்கேற்ற சகல அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ரணில் விக்கிரமசிங்கவின் வழக்கு நடவடிக்கை போலவே ஆளும்தரப்பின் சகல ஜனநாயக விரோத வேலைத்திட்டத்திற்கு எதிராகவும் எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவு தொடர்ந்தும் இணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தை இங்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார். இதன் எதிர்காலப் பணிகளுக்காக கட்சிச் செயலாளர்களின் பங்கேற்புடன் ஒரு செயல்பாட்டுக் குழுவை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இன்று கூடிய சகல கட்சித் தலைவர்களும் நாளை புதன்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் மீண்டும் கூடுவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## செம்மணியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டிருந்தார்.

புதைகுழிகளைத் தோண்டுவதற்குத் தேவையான மேலதிக நாட்கள், செலவு அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டதும் அது தொடர்பில் ஆராய்ந்து ஆய்வுப் பணிகளை நீடிப்பது தொடர்பான உத்தரவுகளை நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## ரணிலைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புறம்பானதாகும் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. அறிக்கையொன்றை வெளியிட்டு பிரதமர் அலுவலகம் அந்த செய்தியை நிராகரித்துள்ளது.

தனியார் செய்தி ஊடக இணையதளமொன்றில், 'பிரதமர் ஹரிணி அமரசூரிய, பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவுடன் ரணிலை சந்திக்கச் சென்றார்' என்ற தலைப்பில் செய்தியொன்று வெளியிடப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்தும் சமூக வலைத்தளங்களில் இந்த செய்தி வேகமாகப் பரவத் தொடங்கியது.

இந்நிலையிலேயே குறித்த செய்தி போலியானது என பிரதமர் அலுவலகம் மறுப்பு தெரிவித்துள்ளது. மேலும் இவ்வாறான செய்திகள் வெளியிடப்படுவதானது ஊடக தர்மத்துக்கு முரணானது என்றும் பிரதமர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு பிரதமர் தொடர்பில் இவ்வாறான செய்தி வெளியிடப்பட்டுள்ளமை கவலைக்குரியது என்றும், அந்த செய்தியின் உண்மைதன்மையை வெளிப்படுத்துமாறும் குறித்த ஊடக நிறுவனத்தை வலியுறுத்துவதாக பிரதமர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜன பெரமுனவின் பணியிடத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

75 ஆண்டுகால அரசியல் கட்டமைப்பை சாபம் என்று விமர்சித்தே தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது. கடந்த கால ஆளும்தரப்புக்கள் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் நாட்டை நிர்வகித்துள்ளன. பொருளாதாரமீட்சிக்குநிலையானதிட்டங்களை ஆளும்தரப்புக்கள் செயற்படுத்தியபோது ஜேவிபி அதற்குக் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தின. இதனால் அந்தத் திட்டங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன.

ஜேவிபியின் போராட்டத்தால் இடைநிறுத் தப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் இன்று ஜேவிபியினால் மீள ஆரம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனையே கர்மவினை என்று குறிப்பிடுவார்கள்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் பழிவாங்களுக்காகவே கைது செய்யப்பட்டுள்ளார். அரசியல் கட்சிகளுக்கிடையில் கொள்கை ரீதியிலான வேறுபாடுகள் காணப்படலாம். இருப்பினும் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகள் தலைதூக்கும்போது அதற்கு அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்பு தெரிவிக்கவேண்டும். அரசியல் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக குரல் கொடுக்கவில்லை.

அரசியல் பழிவாங்கலை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்படாமல் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஆளும்தரப்பு நிறைவேற்றவேண்டும். ஆளும்தரப்பின் மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடைந்துள்ள நிலையில் மக்களின் கவனத்தை திசைத்திருப் புவதற்காகவே கைதுகள் இடம்பெறுகின்றன. ஆளும்தரப்பின் பலவீனமான நிர்வாகத்துக்கு எதிராக மக்கள் அணிதிரள்வார்கள் என்றார்.

## தமிழ் அரசுக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினால், செம்மணிப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை இடம்பெறவேண்டும் என்று வலியுறுத்தி நடத்தப்படவுள்ள கையெழுத்துப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு தமிழ் அரசுக் கட்சி அனுப்பவுள்ளது. இன்று அல்லது நாளை அந்தக் கடிதத்தை அனுப்புவோம். இனப்படுகொலைக்கான விசாரணையை வலியுறுத்தி இந்தக் கடிதத்தை அனுப்பவுள்ளோம்.

செம்மணி மனிதப் புதைகுழி இனப்படுகொலைக்கான நோக்கத்தை வெளிப்படுத்துகின்ற ஒரு விடயமாகவும் இது வருகின்றது. சாதாரணமாக இனப்படுகொலை போன்ற சர்வதேசக் குற்றங்களிலே மென்ஸ்ரியா என்று கூறுகின்ற மன எண்ணத்தை நிரூபிக்கப்படவேண்டியது அவசியம். எல்லாக் குற்றங்களுக்கும் ஒரு மன எண்ணம் இருக்கவேண்டும், அது இருக்கும். ஆனால் இனப்படுகொலையை நிரூபிப்பதற்கு அதைவிட விசேடமாக இந்த நோக்கத்தை இன்னொரு கூறாக நிரூபிக்கப்படவேண்டியிருக்கிறது. அப்படியான விசேட நோக்கம் இருப்பதை இந்த செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் மிகத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது –

தமிழர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஏற்கனவே செய்யப்பட்ட பல விசாரணை அறிக்கைகள் உண்டு, சர்வதேச அறிக்கைகளும் உண்டு. இப்போதும்கூட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்தினால் சாட்சிகள் சேரிக்கப்பட்டு பாதுகாக்கப்படுவதற்கான ஒரு அலுவலகம் இயக்கப்படுகிறது. அந்தப் பணியில், இந்த இனப்படுகொலைக்கான நோக்கத்தை வெளிப்படுத்துகின்ற விடயங்களையும் ஆதாரமாகத் திரட்டிப் பாதுகாக்க வேண்டும் என்று நாங்கள் எங்கள் கடிதத்திலே வலியுறுத்துகின்றோம் – என்றார்.

## ரணில் மீதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசனையின் பேரில் ரணிலை சிக்க வைப்பதற்காகவென்றே முன்னெடுக்கப்பட்ட திட்டமிடல் என்று பல அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ள தொடர்பில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: :

இன்று, ஆளும்தரப்பு அதன் அடக்குமுறை அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இது நாட்டில் ஜனநாயகத்தையும் அரசியல் சுதந்திரத்தையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. கட்சித் தலைவர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களை அடக்கி, அடிபணிய வைத்து, மௌனமாக்குவதற்கு அரச சேவையில் காணப்பட வேண்டிய சுயாதீனத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தி பொலிஸ், இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு என்பன செயற்படுகின்றன.

புலனாய்வுத்துறையில் தமது சொந்த அரசியல் ஆளுமைகளைக் கொண்டு நிரப்பி அதனை அடிபணியச் செய்வதன் மூலம் அரச பொறிமுறையில் காணப்படவேண்டிய சுதந்திரத்தை சிதைத்து அவற்றை நிறைவேற்றதிகாரத்தின் ஏகபோகத்திற்கு உட்படுத்துகிறார்கள் என்று நம்புகின்றோம். நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, ஆளும்தரப்பிற்கு எதிரான மக்கள் எதிர்ப்பை அடக்குவதற்கும் முடக்குவதற்கும் ஆளும்தரப்பிடம் வேறு மாற்று நடவடிக்கைகள் இல்லை என்பது இவற்றின் மூலம் தெளிவாகிறது.

ஓர் அரச தலைவரின் கடமைகளுக்கும் தனிப்பட்ட செலவுகளுக்கும் இடையே தெளிவான கோட்டை வரையறுப்பது எளிதானதல்ல. இந்நிலையில் விசாரணைகள் நிறைவு செய்யப்படாத ஒரு குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவித்து முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை விளக்கமறியலில் வைத்திருப்பது பல கட்சி அரசியலையும் ஜனநாயகத்தையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தும்' ஒரு செயல்முறையாகும்.

விசாரணை செயல்முறை முழுமைய டையாத சூழலில், பிணையில் வெளிவர முடியாதவாறு குற்றஞ்சுமத்தி ஒருவரை சிறையில் அடைப்பதன் மூலம், சட்டத்தின் ஆட்சி நீண்ட காலத்துக்கு வீழ்ச்சியடைய வழி வகுக்கும். பொலிஸ் உட்பட சட்டப்பூர்வ நிறுவனங்களால் நடத்தப்படும் சுயாதீன புலனாய்வு விசாரணைகளின் வெளிப்படைத்தன்மை மீதான பொதுமக்களின் நம்பிக்கை குறைமதிப்பிற்கு உட்பட்டுள்ளது, இவ்வாறு சட்டத்துறை செயல்முறையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கை குறைமதிப்பிற்கு உட்படுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து நாங்கள் கவலை தெரிவிக்கிறோம்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு, சட்டத்தை தவறாகப் புரிந்துகொண்டு அரசியல் நோக்கங்களுக்காக கட்டமைக்கப்பட்ட குற்றச்சாட்டு என்றே கருதுகின்றோம். குற்றச்சாட்டுகளுக்கு அடிப்படையான உண்மையான தகவல் அரசுத் தலைவர் செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவால் தயாரிக்கப்பட்டது. இது ஜேவிபி ஆர்வலர்களின் ஆலோசனையின் பேரில் தயாரிக்கப்பட்டதாகவும், ரணில் விக்கிரமசிங்கவை சிக்க வைப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட திட்டமிடல் என்றும் தெரியவருகிறது.

அரசுத் தலைவர் செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை கணக்காய் வாளரினால் உறுதிப்படுத்தப்படவில்லை. எனவே, அதன் பின்புலத்திலுள்ள அரசியல் நோக்கம் தெளிவாகிறது. இலங்கையில் சட்டத்துறை நீதித்துறை எவ்வாறு செயற்படவேண்டும் என்பதை நிர்வகிக்கும் சட்ட நடைமுறைகள் உள்ளன. இருப்பினும், விசாரணை முடிவடைவதற்கு முன்பே வழக்கில் 38 சாட்சிகளைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்துவது நாட்டின் நீதித்துறை அமைப்பின் நடைமுறைகளுக்கு முரணானதாகும்.

மேலும், இந்த முறைப்பாடு தொடர்பான குற்றச்சாட்டுகள், கடந்த அரசுத் தலைவர் தேர்தலின்போது ஜேவிபி தலைமையகத்தில் ஊடகவியலாளர்கள் மாநாடுகளை நடத்திய முன்னாள் புலனாய்வுப்பிரிவு அதிகாரிகளால் முன்வைக்கப்பட்டன. பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருந்தவர்களான அவர்கள் பின்னர் அரசியல் தேவைகளுக்காக மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்டுள்ள இந்தப் புலனாய்வுத்துறை அதிகாரிகள், அரசியல் நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் விசாரணைகளை நடத்தி குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்கிறார்கள், இது ஜனநாயக அரசியல் நடவடிக்கைகளில் பெரும் செல்வாக்கை செலுத்துகிறது.

ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்தமை மற்றும் பிணை வழங்க முடியாத குற்றச்சாட்டின் அடிப்படையில் விளக்கமறியலில் வைப்பதற்காக நடவடிக்கையானது, பிணையில் வெளிவர முடியாத குற்றத்திற்காக கைது செய்து காவலில் வைப்பது, அரசமைப்பு ஏகபோகத்தை நோக்கி முன்னேறும், பல கட்சி அரசுகளுக்கு எதிரான நடைமுறையாகும். இது அரசமைப்பை ஏகாதிபத்தியத்தை நோக்கிக் கொண்டு செல்லும் பல கட்சி அரசியல் எதிர்ப்பு நடவடிக்கையாகும்.

பல கட்சி ஜனநாயகம், அரசியல் சுதந்திரம் மற்றும் அரசியல் கருத்துக்களைக் கொண்டிருக்கும் உரிமையைப் பாதுகாக்க அரச பொறிமுறை வழிநடத்தப்படவேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகிறோம். இந்தச் செயன்முறைக்கு எதிரான எமது வலுவான எதிர்ப்பையும் கவலையையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். அரசியல் தலைவர்கள் என்ற ரீதியில் இந்த முழு செயல்முறையையும் நாம் கண்டிக்கின்றோம்

## பிள்ளையானுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சகல எதிர்க்கட்சிகளும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர்கள் சந்திப்பு ஆளும்தரப்பிற்குப் பெரும் வலியைக் கொடுத்திருக்கிறது. இதற்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணையும் என ஆளும்தரப்பு எதிர்பார்க்கவில்லை. நாம் ஒவ்வொரு கட்சிகளையும் கொள்கைகளையும் பின்பற்றினாலும் அனைவரும் இணைந்து செயற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படக் கூடும். அரசியலில் எதிரிகளும் நண்பர்களும் எப்போதும் இணைந்தோ அல்லது பிரிந்தோ இருப்பதில்லை.

2004இல் மஹிந்த ராஜபக்சவை அரசுத் தலைவராக்குவதற்கு தற்போதைய ஆளும்தரப்பே உதவியது. 1988களில் தமது கட்சியைச் சேர்ந்த சட்டத்தரணிகளை ராஜபக்சர்களே கொன்றனர் என்று கூறிக் கொண்டிருந்த ஜே.வி.பி.யே இவ்வாறு மஹிந்தவுக்கு ஒத்துழைப்பு வழங்கியது. இப்போது பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் ரணிலை விமர்சிப்பவர்கள், 2010இல் சரத் பொன்சேக்காவை அரசுத் தலைவராக்கவும், ரணில் விக்கிரமசிங்கவை

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இளைஞர்களைக் காப்போம்

இலங்கையில் பொருளாதார நெருக்கடி மற்றும் வேலைவாய்ப்புக் குறைபாடு பல இளைஞர்களை வெளிநாட்டில் வேலை தேடி செல்லத் தூண்டியுள்ளது. அந்த ஆவலைக் குற்றவாளி வலையமைப்புகள் தங்கள் சதி வலைகளில் சிக்கவைத்து, மனிதக் கடத்தலின் புதிய முகத்தை வெளிப்படுத்தி வருகின்றன. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான ஆசை, சுற்றுலா/விசிட் விசாவால் நாட்டைவிட்டு புறப்பட்ட பிறகு ‘அதை வேலைவிசாவாக மாற்றிக் கொள்ளலாம்’ என்ற பொய்யான வாக்குறுதிகள் மூலம் பல இளைஞர்கள் சிக்கிக்கொள்கின்றனர். அவர்கள் தங்கள் கனவுகளை அடைவதற்கு முன், சட்டவிரோத தொழில்களில், குற்றச் செயல்களில், சைபர் மோசடிகளில் சிக்கி மனிதத்தன்மையே பறிக்கப்படுகின்றது.

சமூக ஊடகங்கள், மெசேஜிங் செயலிகள் மூலமாக நம்பிக்கை ஊட்டும் போலியான ‘வெற்றிக் கதைகள்’ பகிரப்படுகின்றன. இந்தக் கதைகளைக் கேட்டு ஈர்க்கப்படும் இளைஞர்கள், வெளிநாடுகளுக்குச் சென்றவுடன் தாங்கள் ஏமாற்றப்பட்டதையும், அங்குள்ள குற்றவாளி குழுக்களின் பிடியில் சிக்கிக்கொண்டதையும் உணருகின்றனர். சிலர் சட்டவிரோத தொழில்களில் ஈடுபடத் திணிக்கப்படுகின்றனர். மற்றவர்கள் சைபர் குற்ற வலையமைப்புகளில் சிக்கி மற்றவர்களைத் துஷ்பிரயோகம் செய்யும் கருவிகளாக மாறுகின்றனர்.

இந்தநிலையில், சிலர்தைரியம்காட்டிஅங்குள்ளஅதிகாரிகளையும் கொழும்பில் உள்ள தேசிய மனிதக் கடத்தல் தடுப்பு பணிக்குழுவையும் (NAHTTF) அணுகியுள்ளனர். சிலர் சர்வதேச குடியேற்ற அமைப்பின் (IOM) உதவியோடு மீட்கப்பட்டு நாடு திருப்பப்பட்டுள்ளனர். ஆனால், புகார் செய்யத் தயங்கியவர்களோ அல்லது அணுக முடியாதவர்களோ இன்னும் சிக்கியுள்ள அபாயத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இலங்கை அரசு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சின் ஒத்துழைப்போடு, NAHTTF வழியாக மனிதக் கடத்தலை எதிர்க்கும் முயற்சிகளில் முன்னேற்றம் கண்டுள்ளது. ஐநுனி போன்ற சர்வதேச அமைப்புகளின் ஒத்துழைப்பும் பாராட்டத்தக்கது. விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகள், சட்ட அமலாக்கத்தில் ஒருங்கிணைப்பு ஆகியவை வலுவடைந்துள்ளன. எனினும், இளைஞர்களின் வேலைவாய்ப்பு அவசரம் மற்றும் பொருளாதார சிக்கல்கள் தொடர்ந்து மனிதக் கடத்தலுக்கான வளமான நிலப்பரப்பை உருவாக்கி வருகின்றன.

இந்த மாதம், IOM இலங்கை அரசுக்கு ஒரு முக்கிய பரிந்துரை அறிக்கையைவழங்கியுள்ளது. அது, 2026–2030 தேசியநடவடிக்கைத் திட்டம் உருவாக்கப்படுவதற்கு அடிப்படையாக இருக்கும். ஐநுனி–இன் இலங்கை மற்றும் மாலத்தீவுத் தூதர் கிறிஸ்டின் பார்கோ, “இலங்கை மனிதக் கடத்தலை எதிர்கொள்வதில் பாராட்டத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. ஆனால், மாறிக்கொண்டிருக்கும் சவால்களை சமாளிக்க விரிவான, முன்னோக்கிய சிந்தனையுடன் கூடிய தேசியத் திட்டம் தேவை,” எனக் குறிப்பிட்டார். மேலும், பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட சட்ட, நிர்வாக அமைப்பை உருவாக்க அரசாங்கத்திற்கு தொடர்ந்து உதவுவதாக உறுதியளித்தார்.

இன்றையசூழலில், தனித்தனிஅமைச்சுகள்அல்லதுஅமைப்புகள் மட்டுமே செயல்பட்டால் போதாது. முழுமையான அரசாங்கக் கொள்கையும் செயல்முறையும் அவசியம். கல்வி அமைச்சின் வழியாகவே இளைஞர்களிடம் மனிதக் கடத்தலின் அபாயங்கள் குறித்து பாடங்கள் கற்பிக்கப்படலாம். தகவல் ஊடகங்களின் மூலமாக விரிவான விழிப்புணர்வு இயக்கம் முன்னெடுக்கப்பட வேண்டும். வெளிநாட்டுச் செல்லும் முன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள், உரிய விசா செயல்முறைகள், சட்டரீதியான வழிமுறைகள் குறித்த அறிவு பொதுமக்களிடம் பரவ வேண்டும்.

மேலும், வெளிநாட்டு பிரதிநிதித்துவங்கள் (எ.கா. இலங்கை தூதரகங்கள், துணைத் தூதரகங்கள்) அவசர உதவிக்கான தளங்களாக வலுப்படுத்தப்பட வேண்டும். வெளிநாடுகளில் சிக்கிய இளைஞர்களுக்கு உடனடியாக சட்ட, மனிதாபிமான உதவி கிடைக்கச் செய்வது மிக அவசியம்.

மனிதக் கடத்தலின் வேர் காரணம் பொருளாதார அவசரமும் வேலைவாய்ப்பு இல்லாமையும் ஆகும். நாட்டின் இளைஞர்கள் பாதுகாப்பான வேலை வாய்ப்புகளை இங்கிருந்தே பெறும் வகையில் உள்நாட்டு வேலை வாய்ப்பு கொள்கைகள் வலுப்படுத்தப்பட வேண்டும். வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் தேவைப்பட்டாலும், அவை சட்டப்படி, பாதுகாப்பாக, வெளிப்படையாக அமைய வேண்டும் என்பதில் அரசு கவனம் செலுத்த வேண்டும்

இலங்கையின் இளைஞர்கள் நம் தேசத்தின் எதிர்காலம். அவர்கள் மனிதக் கடத்தலின் வலைகளில் சிக்கி, குற்ற உலகின் கைப்பாவைகளாக மாறுவது நாட்டின் எதிர்காலத்தையே சிதைக்கக் கூடும். எனவே, விழிப்புணர்வு, சட்ட அமலாக்கம், சர்வதேச ஒத்துழைப்பு, பொருளாதார முன்னேற்றம் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்து அரசு செயல் பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

மனிதக் கடத்தல் என்பது ஒரு சட்டப்பூர்வ பிரச்சினை மட்டும் அல்ல, அது மனித உரிமை மீறலாகும். இளைஞர்களின் கனவுகள் ஏமாற்றமாய் மாறாமல், அவர்களின் வாழ்வாதாரம் குற்றவாளிகளின் கரங்களில் சிக்காமல் இருப்பதற்கான பொறுப்பு அரசு, சமூகம், பெற்றோர்கள், கல்வி அமைப்புகள் அனைத்தின்மீதும் உள்ளது.

இது இனி தாமதிக்க முடியாத கடமையாக மாறிவிட்டது.

# விடுவிக்கப்பட்ட தமது படகுகளை மீட்க இந்திய மீனவர் 14 பேர் யாழ். வருகை

இலங்கை அரசால் விடுதலை செய்யப்பட்டு யாழ்ப்பாணம்துறைமுகத்தில்தடுத்துவைக்கப்பட்டுள்ள படகுகளை மீட்க 14 பேர் கொண்ட இந்திய மீனவர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

விடுதலை செய்யப்பட்டு மீட்கப்படாமல் உள்ள ஏழு மீன்பிடி விசைப் படகுகளை ஆய்வு செய்து மீட்டு இந்தியாவிற்கு கொண்டு செல்வதற்காக இந்த 14 பேர் கொண்ட மீனவக் குழு ராமேஸ்வரத்தில் இருந்து இலங்கை நோக்கி மீன்பிடி படகில் வந்துள்ளனர்.

ராமேஸ்வரம்மீன்பிடித்துதுறைமுகத்தில்இருந்து 2023 மீன் பிடிக்கப் புறப்பட்டு எல்லை தாண்டி மீன்பிடித்ததாக குற்றஞ்சாட்டப்பட வழக்குகளில் விடுதலை செய்யப்பட்ட ஏழு படகுகளை மீட்கவே அவர்கள் வந்துள்ளனர். படகுகள் விடுவிக்கப்பட்ட 2 ஆண்டுகள் சென்றாலும் இலங்கையில் அரசியல் குழப்பங்கள், ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டதால் கடந்த இரண்டு ஆண்டுகளாக மீனவர்களின் மனு பரிசீலிக்க படாமல் இருந்தது வந்தது. இலங்கை அயலுறவுத்துறை கடந்த வாரம் மீன்பிடி படகுகளை படகின் உரிமையாளர்கள் மீட்டு இந்தியாவிற்கு எடுத்து செல்ல அனுமதி அளித்தது.

அதன் அடிப்படையில் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலை செய்யப்பட்ட ஏழு படகுகளை பார்வையிட்டு திரும்ப எடுத்து வருவதற்காக இராமேஸ்வரம் மீன் பிடி துறைமுகத்தில் இருந்து ராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவ சங்க தலைவர் ஜேசுராஜா தலைமையில் படகு உரிமையாளர்கள் என 14 பேர் கொண்ட குழு விசைப்படகு ஒன்றில் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளனனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்ட மீனவர்கள் குழுவை மீன்பிடி படகுடன் இலங்கை இந்திய சர்வதேச கடல் எல்லையில் வைத்து இந்திய கடலோர காவல் படையினர் இலங்கை கடற்படை வசம் ஒப்படைத்தனர்.

ஒப்படைக்கப்பட்ட மீனவர்கள் யாழ்ப்பாணம் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு நேற்று மாலை சென்றடைந்து அங்கு இலங்கை அரசால் விடுதலை செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட ஏழு படகுகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

படகுகளின் நிலையை ஆய்வு செய்தன பின்னர் அவற்றை மீட்டுச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பர். இரண்டு நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கி படகுகளின் தரம் மற்றும் உறுதிதன்மை, இயந்திரங்களில் ஏற்பட்ட பழுது குறித்து ஆய்வு செய்த பின்னர் மீண்டும் ராமேஸ்வரம் திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 108 இணையர்களுக்கு ஒரே மேடையில் திருமணம்

## செவ்வாயன்று யாழ்ப்பாணத்தில்

சிங்கப்பூர் வாழ் தமிழ் உணர்வாளரது நிதிப் பங்களிப்பில் யாழ் மாவட்டத்தில் திருமண வயதை எட்டியும் பொருளாதார நிலை காரணமாக இல்லற வாழ்வில்இணையமுடியாதிருக்கும்108சோடிகளுக்கு திருமணம் செய்துவைக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துஊடகச்சந்திப்பொன்றைமுன்னெடுத்து இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கப்பூரை வதிவிடமாகக் கொண்ட துரை சுமதினியின் பங்களிப்பிலேயே குறித்த 108 தம்பதியினருக்குதிருமணம்செய்துவைக்கப்படவுள்ளது

தங்கத்தாலி, சீதனம்உள்ளிட்டஅனைத்தும்குறித்த தம்பதியினருக்கு வழங்கப்பட்டு தொண்டமனாறு செல்வச் சந்நிதியான் ஆலயத்தில் ஓகஸ்ட் 28 அன்று குறித்த 108 தம்பதியினருக்கும் திருமணம் செய்து வைக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

# சாவகச்சேரி சபைகளில் தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களை நீக்கக் கோரி வழக்கு

சாவகச்சேரி நகர சபைக்கும், சாவ கச்சேரி பிரதேச சபைக்கும் தெரிவு செய்யப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்களின் தேர்வுகளை இரத்துச்செய்து, அவர்கள் போட்டியிட்ட வட்டாரங்களில் அடுத்த நிலையில் இருக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்களைச் சபையின் உறுப்பினர்களாக அறிவிக்கக் கோரி தமிழரசுக் கட்சி உறுப்பினர்களினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் இன்று விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி சூசைதாசன் முன்னிலையில் அரசுத் தலைவர் சட்டத்தரணி சுமந்திரன் சுமார் ஒன்றரை மணி நேரம் வாதாடி முன்வைத்த சமர்ப்பணங்களை ஏற்றுக் கொண்டு எதிர்த் தரப்புக்கு அழைபாணை உத்தரவு பிறப்பிக்க நீதிபதி கட்டளையிட்டார்.

மேற்படி இரு உள்ளூராட்சி சபைகளிலும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் தெரிவு செய் யப்பட்ட ஒவ்வொரு பெண் உறுப்பினர்கள் அந்தந்தச் சபைகளில் போட்டி யிடுவதற்கான தகமையற்றவர்கள், தகுதியீனம் உடையவர்கள் என உயர் நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பு ஒன்றை வழங்கியிருந்தது. அந்தத் தீர்ப்பின்படி மேற்படி இரு பெண் உறுப்பினர்களும் அந்தந்தச்சபைகளின்வேட்பாளர்பட்டியலில் இடம்பெறத் தகுதியற்றவர்கள் எனக் காணப்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட இரு வேட்புமனுக்களிலும் இருக்க வேண்டிய பெண் உறுப்பினர்களின் விகிதாசாரம் குறைந்து அந்தப் பட்டியல்களே தேர்த லில் போட்டியிடுவதற்கான தகுதியை இழந்து விட்டன எனத் தற்போது மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் மனுதாரர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அது தொடர்பான விளக்கங்களை செவிமடுத்த நீதிபதி அதன் அடிப்படையில் எதிர்மனுதாரர்கள் அனைவருக்கும் நோட்டீஸ் பிறப்பிக்க உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சாவகச்சேரி பிரதேச சபைக்குப் போட்டியிட்ட தமிழ் அரசுக் கட்சியின் 23 வேட்பாளர்களும் சாவகச்சேரி நகர சபைக் குப் போட்டியிட்ட தமிழரசுக் கட்சியின் 16 வேட்பாளர்களும் இந்த மனுக்களில் மனுதாரர்கள் ஆவர். இரண்டு சபைகளிலும் போட்டியிட்ட மற்றைய கட்சிகள் அனைத்தினதும் வேட்பாளர்கள் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். அதன்படி சாவ கச்சேரி பிரதேச சபை தொடர்பான வழக் கில் 225 பேரும், சாவகச்சேரி நகர சபை தொடர்பான வழக்கில் 151 பேரும் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டங்களின்படி இத்தகைய வழக்குத் தாக் கல் செய்யப்பட்டால், அந்த வழக்கு முதல் தடவை நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்குள் வழக்கு விசாரித்து முடிவுறுத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் இந்த இரு வழக்குகளும் காலம் இழுபடாமல் விரைவில் முடிவுக்கு வரும் என எதிர் பார்க்கலாம். மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி களான கேசவன் சயந்தன், பெனிஸ லஸ் துஷான் ஆகியோரும் மன்றில் ஆஜராகினர்.


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
•CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
46, Brodie Lane , Jaffna.

# தமிழர்களுக்கு இழைத்த துரோகத்திற்கான தண்டனையே ரணிலின் சிறைக் காவல்

ஈழத் தமிழர்களுக்கு இழைத்த துரோகத்திற்கு இறைவன் அளித்த தண்டனையே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறையில் அடைபட காரணம் என கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சந்திரசேகரன் ராஜன் தெரிவித்தார்.

கல்முனை ஊடக மையத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்ரமசிங்க என்பவர் நாட்டில் பிரதமராகவோ ஜனாதிபதியாகவோ இருந்திருக்கிறார். அவர் நாட்டுக்குதான் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் இருந்தாரே அன்றி எமது தமிழ் சமூகத்திற்கு துரோகம் செய்திருக்கிறார். அதாவது 2015 ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தில் எமது கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக தீர்வு ஒன்றினை பெற்றுத் தருமாறு பாராளுமன்ற கட்டிட தொகுதியில் அவரின் காலில் விழுந்து கேட்டபோது இரவோடு இரவாக உடனே செய்து தருகிறேன் என்று கூறி அதை செய்து தரவில்லை.

இது தவிர இன்னும் ஒரு பாரதூரமான விடயம் ஒன்று உள்ளது. எமது இனத்திற்காக போராட்டத்தில் ஈடுபட்ட தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தை நரி தந்திரத்தை பயன்படுத்தி இரண்டாகப் பிரித்தவர் இந்த ரணில் விக்கிரமசிங்க தான். இவருக்கு இன்று ஆண்டவன் ஒரு தண்டனை கொடுத்திருக்கிறான். இந்த தண்டனை தமிழர்களால் முஸ்லிம்களாலோ அவருக்கு வழங்கப்படவில்லை.அது அவருக்கு கடவுளால் கொடுக்கப்பட்ட தண்டனை.அவருடைய இனம் சமூகத்தாலேயே அந்த தண்டனை வழங்கப்பட்டிருக்கின்றது .ஆனால் அது கடவுளால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். இந்த விடயத்திற்கு கடவுள் தான் பதில் கொடுக்க வேண்டும் என குறிப்பிட்டார்.

## சாய்ந்தமருதில் மு.கா. பலப்படுத்த நடவடிக்கை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது பிரதேசத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பலப்படுத்துவது தொடர்பிலான முக்கிய கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகார பணிப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் அவரது இல்ல வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயற்குழு செயலாளர் ஏ.சி. சமால்டீன் உட்பட கட்சியின் சாய்ந்தமருது பிரதேச வட்டார அமைப்பாளர்கள், சிரேஷ்ட உறுப்பினர்கள், இளைஞர்கள் மற்றும் பெண்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சாய்ந்தமருது பிரதேசத்தில் துரித கதியில் கட்டியெழுப்புவதற்கான வேலைத் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதற்காக கட்சிப் பிரமுகர்களும் வட்டார அமைப்பாளர்களும் கட்சிப் போராளிகளும் முரண்பாடுகள் எவையுமின்றி ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.




## யாழ்ப்பாணத்தின் தேவைகளை அநுர ஆட்சி நிவர்த்தி செய்யும்

### யாழ். வர்த்தக சங்க பிரதிநிதி ஜெயசேகரம் நம்பிக்கை

யாழ்ப்பாணத்தின் தேவைகளை அநுர ஆட்சி நிவர்த்தி செய்யும் என்று தான் நம்புகிறார் என்று யாழ். வர்த்தக சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜெயசேகரம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகம், குறிகாட்டுவன் இறங்குதுறை, காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றின் அபிவிருத்தியுடன் காங்கேசன்துறை – தமிழ்நாடு கடற் போக்குவரத்து சேவை ஆகியவை விரைவில் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிம் மேலும் தெரிவித்தாவது:

கடந்த அரசுகள் குறித்த முன்னெடுப்புக்களை முன்னெடுப்பதில் அசமந்தமாக இருந்தபோதும் இம்முறை அவற்றை அரசு நிறைவுசெய்யும். அது தொடர்பில் நான் அரசுடன் பேசியுள்ளேன். அதன் அடிபடையிலேயே இதை நான் கூறுகின்றேன்.

தீவக கடற்போக்குவரத்து இன்று பெரும் சவாலாக இருக்கின்றது. வீதி அதிகாரசபை செய்யவேண்டிய விடையத்தை அது கண்டுகொள்காதிருப்பதால் தான் பல அனர்த்தங்கள் நிகழ்ந்தேறியுள்ளன.

இவற்றை கருத்தில் கொண்டே அரசுடன் இவ்விடையம் குறித்து பேசி அதன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## உழவர் வீட்டுத் தோட்டப் போட்டி மாணவர்களுக்கு விதைப் பொதி

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் மாணவர்களிடையே நடத்தி வரும் மாணாக்கர் உழவர் வீட்டுத்தோட்டப் போட்டி இந்த ஆண்டும் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்பதற்காக முன்பதிவு செய்திருந்த மாணவர்களில் இருந்து முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 150 மாணவர்க ளுக்கு உரிய விதைப் பொதிகள் விநி யோகமும் செயன்முறை வழிகாட்டல் கருத்தமர்வும் நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முல் லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கிருபவதனி சிவதீபன், இயற்கை விவசாயச் செயற்பாட்டாளர் காரை நிரோசன், சூழகம் அமைப்பின் செயலாளர் க.நாவலன், கல்வி மேம்பாட்டுச் செயற்பாட்டாளர் கணபதிப் பிள்ளை, கணா பசுமை இயக்கத்தின் சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் யுகேஸ் ஆகியோர் வழி காட்டல் கருத்துரைகளை வழங்கியிருந்தனர்.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பற்றாக்குறை, மாண வர்களில் காணப்படும் போசாக்குப் பற்றாக்குறைவு, நஞ்சற்ற உணவு உற்பத்தி, மாணவர்களை மன அழுத் தங்களில் இருந்து விடுவித்தல் ஆகிய வனவற்றை நோக்காகக் கொண்டு மாணாக்க உழவர் என்னும் இந்தத் திட்டத்தைக் கடந்த சில வருடங்களாக முன்னெடுத்து வருகின்றது.

ஏராளமான மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றுவரும் இந்துப் போட்டியில் பங்கேற்கும் அனைவருக்கும் மாணாக்க உழவர் சான்றிதழ் வழங் கப்படுவதோடு , சிறப்பாக வீட்டுத் தோட் டச் செய்கையை மேற்கொள்பவர்களுக் குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# வீரமுனை பெயர்ப் பலகையை அகற்ற சம்மாந்துறை சபைக்கு அதிகாரமில்லை

## கல்முனை மாநகரசபை முன்னாள் உறுப்பினர் ராஜன் சீற்றம்

(சகாதேவராஜா)

வீதிஅபிவிருத்திஅதிகாரசபைக்குச்சொந்தமான வீரமுனைக்கான பெயர்ப்பலகையை அகற்ற சம்மாந்துறை பிரதேச சபைக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் நேற்று திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் சீற்றத்துடன் தெரிவித்தார்.

கல்முனை ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் வீரமுனை ஆண்டிர சந்தியில் ஆலய வளைகோபுரம் அமைப்பதற்கு முயற்சித்த வேளையில் இதேதரப்பினர் இடையூறு விளைவித்த ரன். அன்றைய அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கவில்லை.

அதேபோல் அண்மையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை தனது ஆதிக்கத்துக்குட்பட்ட 'ஏ' தர பிரதான வீதியில் வீரமுனை பெயர்ப் பலகையை அமைப்பதற்கு முற்பட்டபோது, பிரதேச சபையின் அதிகாரங்கள் என்ன என்று தெரியாத ஒருசில உறுப்பினர்கள் இடையூறு விளைவித்து தடுத்திருக்கின்றனர் .

இதன் பின்னணி என்ன ? இனவாதம் விதைத்தவர்கள் இன்று செல்லாக்காசாய் போய்விட்டார்கள். இனவாதத்தை வைத்து அரசியல் செய்த காலம் மலையேறி விட்டது.

பிரதேசசபைக்குரியஅதிகாரங்களைஅறியாமல் இரு சமூகங்களையும் மோதி விடுகின்ற செயற்பாட்டை அங்குள்ள ஒருசில உறுப்பினர்கள் முன்னெடுக்கின்றார்கள் .இது கவலைக்குரிய விடயம் .

கல்முனைக்கான பெயர்ப்பலகை கல்முனை தென் எல்லையான தரவைப் பிள்ளையார் ஆலய மருகில் நடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது கல்முனைக்குடி எல்லையில்

சாய்ந்தமருதுமுடிவிடத்தில்அமைந்திருக்கின்றது.

இருந்தாலும் பரவாயில்லை என்று நாங்கள் கேட்கவில்லை.

இதே போன்று கல்முனை கடற்கரை பள்ளிவாசலின்பெயர்ப்பலகைகல்முனைபிரதான வீதியில் தரவைப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக நடப்பட்டிருக்கின்றது. ஒன்றரை கிலோமீட்டர் உட்புறமாக அந்த பள்ளிவாசல் அமைந்து இருக்கின்றது . ஆகவே மக்களுக்கு வழிகாட்ட அப் பெயர்ப் பலகை அமைந்தது நியாயமானது. நாங்கள் தமிழர்கள் அதனை ஏன் என்று கேட்கவில்லை .

அதேபோன்று மட்டக்களப்பு ஆரையம்பதியில் உட்புறமாக உள்ள பாலமுனை முஸ்லிம் கிராமத்துக்குரிய பெயர்ப்பலகை பிரதான வீதியில் நடப்பட்டிருக்கிறது. அதனை கூட நாங்கள் கேட்கவில்லை .

அவையெல்லாம்வீதிஅபிவிருத்திஅதிகாரசபை யின் அதிகாரமுள்ள பிரதேசம். அது அவர்களது உரிமைகடமை.

இந்தநிலையில்சம்மாந்துறைபிரதானவீதியில் வீரமுனை பகுதியில் வீரமுனைக் கிராமத்தை சுட்டிக் காட்டுகின்ற பெயர்ப்பலகையை அதற்கு முழுஅதிகாரமும் கொண்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடுகின்ற பொழுது அதற்கு எந்த அதிகாரமும் இல்லாத பிரதேச சபையினர் தடுத்து நிறுத்துகின்றார்கள்.இது நியாயமா? நீதியா? படித்த சமூகம் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனை போலீசார் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் . வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் ஏன் இதனை சட்டம் நீதிக்கு முன் நிறுத்தவில்லை? கடமைக்கு இடையூறு விளைவித்த என்று கடந்த காலங்களில் எத்தனையோவழக்குகள்நீதிமன்றத்தில்உள்ளன.

இன உறவு பற்றி பேசுகின்ற தவிசாளர் என்ன சொல்கின்றார் ?

அம்பாறை மாவட்டத்தில் மூவின மக்களும் சேர்ந்து வாக்களித்தன் பலனாக தேசிய பட்டியல் எம்பியாக ஆதம்பாவா நியமிக்கப்பட்டார்.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்குமாறு கூறிய போராளிகள் வீரமுனையிலும் இருக்கின்றார்கள். இவர்கள் ஏன் இந்தப் பிரச்சினைக்கு ஆதம்பாவாவிடம் சென்று தீர்த்து வைக்க முடியாதா?

மேலும் ஆதம்பாவா எம்பி இந்த வீரமுனை சம்பவத்தை இதுவரை ஏன் கண்டுகொள்ளாமல் ஒதுங்கிக் கொள்கிறார்?

இனமத பேதமற்ற அரசாங்கம் என்று கூறும் இன்றைய அரசாங்கம் இதனை ஏன் கண்டு கொள்ளவில்லை?

வீரமுனையில் ஒரு உறுப்பினருமுள்ளார். இதுவரை அவர் வாய்திறக்க வில்லை. அவரை அந்த மக்கள் எதற்காக தெரிவு செய்தார்கள்?

அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்தால் வேற இடம் என்றால் மறுகணம் கூட்டுக்குள் அடைத்து விடுவார்கள் .

ஆனால் இங்கே வீதி அபிவிருத்தி அதிகாரிகள் வாய்மூடிமௌனியாகதிரும்பிவந்திருக்கிறார்கள். ஏன் ?

அவர்கள் இதுவரை போலீசில் முறைப்பாடு செய்தார்களா ? சட்ட நடவடிக்கை எடுத்தார்களா?

இலங்கையின் முறைப்படி அதிகாரங்கள் பற்றி பார்ப்போம்.

RDA. இற்கு சொந்தமான வீதியில் பிரதேச சபையின் அதிகாரம்

1. RDA (Road Development Authority) சொந்தமான சாலைகள்

தேசிய வீதிகள் (A-கிளாஸ், B-கிளாஸ் சாலைகள்) அனைத்தும் RDA-வின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

அந்தச் சாலைகளில் பலகை, விளம்பரம், பெயர்பலகை போன்றவற்றை வைக்க யூம்பு அனுமதி தேவை.

சட்டப்படி Local Authority (Pradeshiya Sabha- Urban Council- Municipal Council) க்கு RDA சாலைகளில் நேரடி அதிகாரம் இல்லை.

2. பிரதேச சபையின் பங்கு

சபை வரம்புக்குள் உள்ள உள்ளூர் வீதிகள் (rural roads- by-roads) மீது பிரதேச சபைக்கு அதிகாரம் உண்டு.

ஆனால் யூம்பு வீதியில் யாராவது பெயர் பலகை வைக்க வந்தால்,

பிரதேச சபை சட்டரீதியாக தடுக்க அதிகாரம் கிடையாது.

அவர்கள் செய்யக்கூடியது: "இது RDA-வின் கீழ் வரும் சாலை. யூம்பு அனுமதி பெற்றீர்களா?" என்று கேட்பது.

தவறு இருந்தால், யூம்பு-விற்கு தகவல் கொடுக்கலாம்.

3. சட்ட அடிப்படை

RDA Act No. 73 of 1981 – தேசிய சாலைகளின் பராமரிப்பு, கட்டுப்பாடு முழுவதும் யூம்பு க்கு மட்டுமே.

Pradeshiya Sabha Act No. 15 of 1987 - உள்ளூர் சாலைகள் மட்டுமே சபை அதிகாரத்தில்.

முடிவு

RDA சொந்தமான சாலையில் பெயர்ப்பலகை வைக்க வருபவர்களை பிரதேச சபை தடுக்க முடியாது.

அவர்கள் செய்யக்கூடியது அனுமதி பெற்றீர்களா எனச் சரிபார்த்து, தவறு இருந்தால் RDA-வுக்கு தகவல் கொடுப்பது.

நாங்கள் பலகாலமாக பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்த ஒரு சமூகமாக தமிழ் பேசும் மக்களாக தமிழர்களும் முஸ்லிம்களும் இருந்து, வந்திருக்கின்றோம் .

முரண்பாடை களைந்து நீதியின் பால் தீர்க்க வேண்டும்.

அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால் நாங்கள் எல்லோரும் சேர்ந்து வீரமுனை பெயர்ப் பலகையைநாட்ட வேண்டிவரும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

# புதிய அலை கலைவட்ட ஹைக்கூ கவியரங்கம்

புதிய அலை கலை வட்டத்தின் இளைஞர் அணி மாதாந்தம் நடத்தும் ஹைக்கூ கவியரங்கம் எதிர்வரும் 31ஆம் திகதி மாலை 3.30 மணிக்குக் கொழும்பு - 13, புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள எக்ஸலன்ஸ் சர்வதேச பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கவியரங்குக்குத் தலைமையை ஏற்கின்றார் உளவியல் மற்றும் உளவளத் துணை விஞ்ஞான மாணிப் பட்டபடிப்பு மாணவியும் புதிய அலை கலை வட்டத்தின் மகளிர் அணியின் செயலாளருமான பிரியதர்ஷினி . திறந்த நிகழ்வாக நடைபெறவுள்ள இந்த அமர்வில் கலந்துகொண்டு தமது கவித் திறமைகளை வெளிக்கொணர விரும்புவோர் அன்றைய தினம் நேரில் கலந்துகொள்ள முடியும். மேலதிக விவரங்களைப் பெற 075 4880172 என்ற அலைபேசி மற்றும் வட்சப் உடன் தொடர்பு கொள்ளலாம்.

# காணாமலாக்கப்பட்டோர் சர்வதேச தினத்தில் வடக்கு கிழக்கில் போராட்டம் நடத்த முடிவு

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரி எதிர் வரும் 30 ஆம் திகதி வடக்குக் கிழக்கில் மாபெரும் போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்படுள்ளது என்று அறிவிக் கப்பட்டுள்ளது. வடக்குக் கிழக்கு வலிந்து காணாம லாக்கப்பட்டோர் சங்கம்,

அதனை வலுப்படுத்த பேதங்களற்ற வகையில் அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியது ஏற்பாட்டுக் குழு. அங்கு தெரிவிக்கப்பட்டதாவது:

அண்மையில் ஐ. நா. பிரதிநிதி யாழ். வந்து செம்மணியின் தடயங்களை பார்வை யிட்டார். அவரது இந்த செயற்பாட்டை அடுத்து நீதிக்கான சமிக்ஞை கிடைக் கும் என்று நம்பினோம். ஆனால் அத்த னையும் கலைந்துவிட்டது. ஐ.நாவின் பிரதிநிதி உள்ளக பொறி முறையை எம்மிடம் திணித்துச் சென்றது போன்று அவரது கருத்து இருக்கின்றது.

நாம் சர்வதேச விசாரணையையே கோருகின்றோம். அதற்கான வலியுறுத்தலையே இன்றும் தெரிவிக்கின்றோம். எனவே எமக்கு உள்ளக பொறி முறை வேண்டாம். அதில் எமக்கு நம் பிக்கை இல்லை. இந்த நிலையில் எதிர்வரும் 30 ஆம் திகதி செம்மணியில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம். இந்தப் போராட்டத்துக்கு மதத் தலைவர்கள், பல்கலைச் சமூகம், பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புகள், அரசியல் கட்சிகள் என அனைவரும் பேதங்களற்ற வகையில் ஒன்று திரண்டு போராட்டத்தை வலுப்படுத்த வேண்டும் - என்றனர்.

## மத்திய தபால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமராக ஆக்குவதற்கும் முழுமையாக ஆதரவளித்தனர். இதற்கு ஜே.வி.பி. வழங்கும் பதில் என்ன?

இவை மாத்திரமின்றி 2015இல் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்குவதற்கும் இவர்கள் ஒத்துழைப்பு வழங்கினர். அது மாத்திரமின்றி 2018இல் மைத்திரிபால சிறிசேனவைவிட, ரணில்விக்கிரமசிங்கவுக்கு அதிக அதிகாரங்களை வழங்குவதற்கான 21ஆவது அரசமைப்பு திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்ததும் இதே ஜே.வி.பி.யே தவிர வேறு எந்தக் கட்சியுமல்ல. இந்த வரலாறுகளை நாம் இவர்களுக்கு ஞாபகப்படுத்துகின்றோம். எனவே நாம் தற்போது ஒன்றிணைந்துள்ளமையை விமர்சிக்கும் தகுதி ஆளும்தரப்பிற்கு இல்லை.

இவற்றுக்கு அப்பால் கடந்த மாதங்களில் பிரதேசசபைகளில்ஆட்சியமைப்பதற்குஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமின்றி பிள்ளையானின் கட்சி உறுப்பினர்களைக் கூட இவர்கள் இணைத்துக் கொண்டனர். எவ்வித நிபந்தனைகளும் இன்றி இவ்வாறு எதிர்க்கட்சிகளைஇணைத்துக்கொண்டவர்கள் இன்று தூய்மையானவர்களைப் போன்று செயற்படுகின்றனர்.

எமது இந்த இணைவானது வெறுமனே ரணில் விக்கிரமசிங்க என்ற தனி நபரை மாத்திரம் பாதுகாப்பதற்கானதல்ல என்பதை தெளிவாகக் கூறிக் கொள்கின்றோம். அதற்கான தேவையும் எமக்கு இல்லை. ஆனால் ஆளும்தரப்பால் நாட்டின் ஜனநாயகம் தொடர்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள அச்சுறுத்தல் நிலைமையை சரி செய்ய வேண்டியது எம் அனைவரினதும் கடமையாகும். அரசியலமைப்பு ஏகாதிபத்தியமயப்பட்டுள்ளதோடு, பொலிஸ் முற்றுமுழுதாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாகஅரசியல்பழிவாங்கல்களுக்காக நீதித்துறையில் தலையிட்டு அழுத்தம் பிரயோகிப்பதற்கான வேலைத்திட்டங்களும் புறம்பான முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான காரணிகளைத் தடுக்கும் வகையிலேயே எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. இவற்றுக்கு எதிராக இப்போது குரல் கொடுக்காவிட்டால் இது நாட்டை அராஜக நிலைக்கு இட்டுச் செல்லும் என்றார்.

## சட்டத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பு சலுகை வழங்கப்படமாட்டாது என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்ட குற்றச்சாட்டின் பிரகாரம்தான் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டார். நாட்டின் பொதுச் சட்டம் அனைவருக்கும் பொதுவானது.முன்னாள் அரசுத் தலைவர்கள் சட்டத்துக்கு கட்டுப்பட வேண்டும்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்ககைதுசெய்யப்பட்டமைஅரசியல் பழிவாங்கலல்ல, சட்டத்தால் தண்டிக்கப்பட வேண்டியவர்களுக்கு எதிராக நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கும் போது அதனை அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிடுவது ஒன்றும் புதிதல்ல.

எவரையும் பழிவாங்க வேண்டிய அவசியம் ஆளும்தரப்பிற்கு கிடையாது. நீதிமன்றம் சுயாதீனமாகச் செயற்படுகிறது. விசாரணை நிறுவனங்களும் சுயாதீனமாகச் செயற்படுகின்றன. ஆகவே விமர்சனங்களை முன்வைத்துக் கொண்டிருப்பவர்கள் நீதிமன்றத்தை நாடி தமது தரப்பு நியாயத்தை எடுத்துரைக்கலாம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.08.2025இல் வெளியிடப்பெற்றது